# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 253/ 2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 10 |
| Name | : டாக்டர் ஓ.சந்திரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2024.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் உசிலம்பட்டி மாவட்ட தலைமை மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து தற்போது ஓம் முருகா மருத்துவமனை நடத்தி வருகிறேன். நான் மேற்படி தலைமை மருத்துவமனையில் 01.12.2019 அன்று பணியில் இருந்தபோது பிற்பகல் 12.55 மணியளவில் தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தை சேர்ந்த சிங்கம் மகன் பாலாஜி (வயது:15) என்பவர் உயிரற்ற நிலையில் என்னிடம் கொண்டு வந்தார்கள். அவரை பரிசோதித்த போது உயிரில்லை. எனவே அவரை பிரேத பரிசோதனை செய்யும்பொருட்டு பதிவேட்டில் பதிவு செய்தபின் சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். அதன்பின்பு உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய கு.எண்.352-2019 174 சிஆர்பிசி வழக்கில் ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். அப்போது உடலில் எந்த காயமும் இல்லை, ஆனால் கழுத்தில் மட்டும் சேலை தடமானது

இருந்தது. இடது கழுத்து எலும்பு (கையாய்டு) உடைந்திருந்தது. மற்றபடி மூளையில் ரத்தகட்டியோ, கசிவோ இல்லை, எலும்பும் உடையவில்லை. நான் பிரேத பரிசோதனைக்கு உள்ளுருப்புகளை எடுத்து தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் மதுரை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பி.எம்.எண்.166-2019 என எடுத்து அதை பரிசோதனைக்கு எடுத்து அவர்களின் கருத்துரையின் படி இறப்பிற்கான காரணம் கழுத்தில் தூக்குப்போட்டு இறந்துள்ளார் என கருத்து தெரிவித்ததால் அவருடை இறப்பிற்கான காரணம் தூக்கு போட்டு இறந்துள்ளார் என பிரேத கூறாய்வு அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய பிரேத கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரேத பரிசோதனை செய்த நாள் 01.12.2019 என்றால் சரிதான். 25.02.2020ல் தான் தடய அறிவியல் மருத்துவ நிபுணர்களிடமிருந்து கருத்துரை பெற்றேன் என்றால் சரிதான். என்னிடமிருந்து வழக்கின் விசாரணை அதிகாரி 25.06.2020ம் தேதி ஆய்வறிக்கையும், எனது வாக்குமூலமும் பெற்றார் என்றால் சரிதான். பிரேத கூறாய்வு அறிக்கையில் இறப்பிற்கான காரணம் விஷம் அருந்தியதாக இல்லை என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.10.14 15:34:32 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.